**ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ஓய்வூதிய பங்களிப்பு தொகை ரூபா 55,168 தொகை ரூபா 9,045 என கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் கடன்கொடுத்தோர் ரூபா 46,123 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய 07 கணக்கு மீதி உருப்படிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 7,155,586 தொகையானதுடன் அதில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,399,483 ஆக காணப்பட்டது. 2018 யூன் 30 ஆந் திகதி வரை ரூபா 5,278,919 ஆன தொகை மேலும் அறவிடப்பட வேண்டியுள்ளது.

**(ஆ) செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 16 நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 41,809,905 ஆக இருந்ததுடன், அதில் 1 வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 119,440 ஆக காணப்பட்டது. 2018 யூன் 30 ஆந் திகதி வரை ரூபா 13,056,320 ஆன தொகை மேலும் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 8,582,746 தொகையான 08 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

### 1.3.4 இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சட்டம் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) காணப்பட்டிருக்கவில்லை. | --- | 2012 ஆம் ஆண்டின் பின்னர் வீதி பதிவேட்டை நாளதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி, நிர்வாகம்) | | |
| | (i) 155 ஆம் விதி | -- | பீ. எஸ் 10 மாதிரியின் பிரகாரம் பிரதான காசேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) விதி 218 | -- | காணி கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| | (i) நிதிப் பிரமாணம் 1646 | -- | 08 வாகனங்களின் ஓட்டக் குறிப்புக்கள் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | | 03 சந்தர்ப்பங்களில் வழங்கப் பட்டிருந்த ரூபா 54,500 ஆன முற்பணம் உரிய செயற்பாடு முடிவடைந்து 04 மாதங்களுக்கும் 06 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலம் தாமதித்து தீர்வு செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) | ஏனைய | | |
| | 2000 இன் 53 மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | | வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டிய 13 கைத்தொழில் களுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த திருத்திய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 56,303,420 ஆகக் காணப்பட்டதுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 45,694,091 ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரி மற்றும் வரி | 11,281,000 | 11,790,150 | 11,067,117 | 5,755,314 | 10,532,000 | 11,139,644 | 11,650,774 | 5,032,280 |
| (ii) | வாடகை | 1,853,000 | 1,379,230 | 1,443,320 | 62,010 | 1,853,000 | 1,312,365 | 783,565 | 206,100 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணங்கள் | 2,400,000 | 2,298,541 | 2,423,070 | 21,405 | 1,940,000 | 1,945,500 | 2,669,220 | 145,934 |
| (iv) | ஏனைய வருமானம் | 45,663,400 | 45,972,587 | 17,089,025 | 66,994,365 | 41,560,400 | 38,663,781 | 54,714,542 | 36,636,091 |
| | மொத்தம் | 61,197,400 | 61,440,508 | 32,022,532 | 72,833,094 | 55,885,400 | 53,061,290 | 69,818,101 | 42,020,405 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

ஒட்டுமொத்த வருமான விடயங்களிலிருந்து 2016 திசெம்பர் 31 உள்ளவாறு நிலுவை ரூபா 42,020,405 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அப்பெறுமதி ரூபா 72,833,094 ஆக இருந்த காரணத்தினால் அந்நிலுவை வருமானங்களின் அதிகரிப்பு 73 சதவீதமாக இருந்தது. 2018 யூன் 30 இல் உள்ளவாறு ரூபா 70,956,427 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

#### 2.2.3 வீதவரி மற்றும் வரியும்

(அ) 2017 சனவரி 01 இல் உள்ளவாறு வீதவரி மீதி ரூபா 4,755,646 ஆக இருந்ததுடன் ஆண்டின் பட்டியலிடல் ரூபா 10,597,050 ஆக இருந்தது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதில் முறையே ரூபா 2,544,740 மற்றும் ரூபா 7,350,662 தொகை அறவிடப்பட்டிருந்தது. இது 53 சதவீதம் மற்றும் 69 சதவீதமாக இருந்தன. 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 5,457,294 ஆன நிலுவை மீதி காணப்பட்டதுடன், வருமான சேகரிப்பு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டன.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 85,750 ஆக காணப்பட்ட நிலுவை ஏக்கர் வரி மீதி 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்டது.

(இ) (i) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 96,270 ஆன நிலுவை நீர் வரி தொகையொன்று காணப்பட்டதுடன் அதில் ரூபா 20,495 தொகை ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்டது.

(ii) மஹதன்ன நீர் முன்மொழிவுத் திட்டத்தில் கட்டணம் செலுத்தாமையால் 07 நீர் பாவனையாளர்களின் நீர் இணைப்பு துண்டிக்கப்பட்டு ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் ரூபா 17,230 ஆன நிலுவைத் தொகைகள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 ஏனைய வருமானம்

2017 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவை முச்சக்கர வண்டி வருமானம் ரூபா 400,400 ஆக இருந்ததுடன் ஆண்டின் பட்டியலிடல் ரூபா 534,700 ஆக இருந்தது. திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 537,100 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன் அம்மீதியிலிருந்து ரூபா 495,300 தொகை ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்டது.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,548,747 உம் முத்திரைக் கட்டணம் ரூபா 63,072,756 ஆக இருந்தது. உம் அறவிடப்பட வேண்டியிருந்தன. 2018 யூன் 30 இல் உள்ளவாறு ரூபா 70,956,427 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், மக்கள் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட 04 விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக திட்டமிடப்பட்ட 05 செயற்பாடுகளுக்குரிய செயற்பாடுகளைப் பரீட்சிக்கும் போது 02 செயற்பாடுகள் ஆரம்பித்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்ததுடன்

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சபை நடவடிக்கைகள் இடம்பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(இ) கடமைகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

ரூபா 7,150,000 பெறுமதிக்கு தயாரிக்கப்பட 27 அபிவிருத்தி முன்மொழிவுகள் உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் அங்கீகாரத்திற்காக 2017 மார்ச் 30 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டு அதில் ரூபா 6,650,000 பெறுமதியான 26 செயற்திட்டங்கள் 2017 ஆகஸ்ட் 22 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இரண்டாம் கட்டத்தின் கீழ் 2017 செப்தம்பர் 20 ஆந் திகதி ரூபா 1,8550,000 பெறுமதியான 09 முன்மொழிவுகள் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு 2017 ஒக்தோபர் 30 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இக் கால தாமதத்தின் பேரில் ஆண்டின் இறுதியின் போது அபிவிருத்தி முன்மொழிவுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தமையால் செயலாற்றல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது.

**(ஈ) செயற்படுத்தப்படாத செயற்பாடுகள்**

(i) சுகாதார நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சபை அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்காக வாகனமொன்று செல்ல முடியாத இடங்களை மேவுகை செய்வதற்கு முச்சக்கர வண்டியொன்றை கொள்வனவு செய்வதற்கு ரூபா 750,000 மற்றும் உயிரியல் வாயு அலகொன்று கொள்வனவிற்காக ரூபா 150,000 தொகை வருடாந்த பாதீட்டிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்நோக்கத்திட்குட்பட்ட செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) மகளிர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், விரிவாக்கல் சேவை மற்றும் வறுமையை ஒழித்தல் நோக்கில் 04 வேலைத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 850,000 ஆன நிதி ஏற்பாட்டை பயன்படுத்தி நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 1987 இன் 17 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 78.(1) பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டில் பொதுமக்கள் சுகாதார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 06 செலவின விடயங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 175,000 நோக்கத்திற்கு உட்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

**(உ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்ளாமை.**

கழிவுப் பொருட்களை வெளியேற்றுதற்காக கொம்போஸ்ட் கூடைகளிலும் மற்றும் பொலித்தின்களில் தேவைப்பாட்டின் பிரகாரம் இனங்காணப்படாமல் அண்ணளவாக ரூபா 800,000 தொகை மீளாய்வாண்டின் போது நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு ஆண்டினுள் 87 கொம்போஸ்ட் கூடைகள் கொள்வனவு செய்து ரூபா 296,700 செலவிடப்பட்டிருந்தது. குறித்த செயற்பாட்டை நிறைவேற்றுவதற்காக நிதி ஏற்பாட்டின் ஈடுபாடு 38 சதவீதமாக இருந்தது.

**(ஊ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

பிரதான வீதிகளில் மற்றும் உட்புற வீதிகளில் உக்காத மற்றும் உக்காத வகையில் சேகரிக்கப்படும் கழிவுகள் கண்டி மாநகர சபைக்கு சொந்தமான

கொஹாகொடை கழிவுப் பொருள் தொகுதிக்கு நாளாந்தம் 08 - 10 தொன்களுக்கு இடையிலான அளவொன்று வெளியேற்றப்பட்டிருந்த போதிலும் கொம்போஸ்ட் உற்பத்தியோ அல்லது ஏனைய முகாமைத்துவ நடைமுறையொன்று தொடர்பில் பிரதேச சபை கவனம் செலுத்தாதிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

**(எ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

பிரதேச சபை மீளாய்வாண்டிற்காக நிலைபேரான அபிவிருத்தி இலக்குகள் திட்டமொன்று சபை தயாரிக்கப்படாமல் இருந்ததுடன் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக சபை அறிந்து இருக்கவில்லை.

## 3.2. முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 03 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு பிரதேச சபை நிதியம் ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் சட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்படாமல் மீளாய்வாண்டில் 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 11,500,000 தொகை மக்கள் வங்கியிலும் இலங்கை வங்கியிலும் நிலையான வைப்புக்களாக முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நூலகப் புத்தக கட்டும் நடவடிக்கைகள் நூலக உதவியாளர்களைக் கொண்டு நிறைவேற்றக் கூடியதாக இருக்கையில் மீளாய்வாண்டில் 07 சந்தர்ப்பங்களின் போது ரூபா 289,320 தொகை தனியார் நிறுவனமொன்றுக்கு செலுத்தி புத்தகங் கட்டுதல் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருந்தது.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கைக்கு இடையே 12 பதவிகளில் வெற்றிடங்கள் மற்றும் 01 பதவியில் மிகை காணப்பட்டன.

(ஆ) வேலையை விட்டுச் சென்ற, மரணித்த மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற 11 உத்தியோகத்தர்களிடமிருந்து 2012 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 50,871 ஆன கடன் மீதியொன்று மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை

(அ) மீளாய்வாண்டில் பிரதேச சபைக்கு கிடைத்திருந்த 376 முறைப்பாடுகள் பரீட்சிக்கப்பட்டு அறிக்கையிடுவதற்காக தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் சுற்றாடல் உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 14 ஆந் திகதி வரை அதில் 152 முறைப்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதில் 26 முறைப்பாடுகள் தொடர்பாக 2018 யூன் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 - 2017 காலப் பகுதியில் வெவ்வேறு செயற்பாடுகளுக்காக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 128,143 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டின் போது வறுமை வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக மாகாண சபையிலிருந்து கிடைத்த ரூபா 1,000,000 தொகையில்

எஞ்சியிருந்த ரூபா 25,000 தொகையை திருப்பி அனுப்பவோ அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுக்கவோ நடவடிக்கை எடுக்காமல் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

ஓட்ட நிலையில் காணப்பட்ட ரூபா 10,128,144 பெறுமதியான 05 வெவ்வேறு வகையான வாகனங்கள் சாரதிகள் இல்லாத காரணமாக ஓட்டத்தில் ஈடுபடுத்தாமல் குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்ட வகையில் மெதவல வியாபார தொகுதி வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

#### 3.5.2 களஞ்சிய கட்டுப்பாடு

களஞ்சிய இருப்பு பேரேட்டு மீதிகள் மற்றும் பௌதீக மீதிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது ரூபா 21,385 பெறுமதியான 03 உருப்படிகளில் மிகையொன்றும் ரூபா 21,318 பெறுமதியான 07 பொருள் உருப்படிகளில் பற்றாக்குறையொன்றும் அவதானிக்கப்பட்டது.

### 3.6 பெறுகை

#### பெறுகை திட்டம்

ரூபா 43,649,323 ஆன மூலதனச் செலவினம் சபை செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிராகரம் மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களுடன் 3 வருமான விடயங்களில் 20 சதவீதம் முதல் 160 சதவீதம் வரையிலும் 06 செலவின விடயங்களில் 22 சதவீதம் முதல் 76 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு ஏனைய கடமைகள் கையளிக்கப்பட்டிருந்த காரணத்தினால் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை சுயாதீனமாகவும் போதியளவும் நிறைவேற்ற முடியாதிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) வருமான நிருவாகம் | i. நிலுவை வருமானம் அறவிடப்படாமை<br>ii. ஆதனங்களை தடை செய்யும் செயற்பாட்டிற்காக தொடர்புபடாமை |
| (ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம் | i சொத்துக்கள் முறையாக பயன்படுத்தப்படாமை<br>ii. சொத்துக்கள் குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தமை |
| (இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் | i சரியாக கணக்கீடு செய்யப்படாமை<br>ii. கடன் கொடுத்தோர் தீர்வு செய்யப்படாமை |
| (ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு | i பதிவேடுகள் முறையாக பேணப்படாமை<br>ii. கைதவிர்க்கப்பட வேண்டிய சொத்துக்கள் கை தவிர்க்கப்படாமை |
| (உ) பாதீட்டுக் கட்டுப்பாடு | i மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு செலவிடப்படாமை<br>ii. மதிப்பிடப்பட்ட வருமானம் அறவிடப்படாமை. |